1975 நவம்பர் 11]

மாண்புமிகு திரு. என். இராசாங்கம்: தலைவரவர்களே இப்பொழுது இங்கே குறிப்பில் இருக்கின்ற பத்து இடங்களில் கட்டிடங்கள் கட்டுவதற்கான வேலைகள் துவக்கப்பட்டிருக்கிறது. அந்த வேலைகள் நடந்து அதற்குரிய காரியங்கள் நடந்து வருகின்றன. அது வேகமாக நடைபெற வேண்டுமென்பதற்காகத் தான் முதலமைச்சரவர்கள் முதலில் 40 ஹாஸ்டல்களின் கட்டிட வேலைகளை முடித்துவிட வேண்டுமென்று மாவட்ட ஆட்சித் தலைவரிடம் சொல்லியிருக்கிறார்கள். வேலைகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

தீண்டாமை ஒழிப்புச் சட்டம்

* 305 வினா—திரு. வை. பாலசுந்தரம்: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1974 ஆம் ஆண்டில் தீண்டாமை ஒழிப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்கள் எவ்வளவு பேர்?

மாண்புமிகு திரு. என். இராசாங்கம்: 1009.

திரு. வை. பாலசுந்தரம்: தலைவரவர்களே, 1967 ஆம் ஆண்டுக்குப் பிறகுதான் இந்தத் தீண்டாமை ஒழிப்பில் அரசு கவனம் செலுத்தி அதிகமான நபர்களைப் பிடித்து வருகிறது. இதைத் தீவிரப்படுத்தியதன் விளைவாக தீண்டாமை தமிழகத்தைப் பொறுத்தவரையில் ஒழிந்து வருகிறது. குறிப்பாக மேலும் இதில் தீவிரம் காட்டி ஒவ்வொரு தாலுக்காவிலும் இருக்கின்ற காவல் நிலையங்களில் இதற்கென்று ஒரு தனிப் பிரிவைப் போட்டு அரசு தீவிரம் காட்டுமா என்பதனை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். இராசாங்கம்: தலைவரவர்களே, இப்பொழுது 6 மாவட்டங்களில் இது அமல்படுத்தப்பட்டு வருகிறது, சிறப்பு காவல் படைகள் மூலம். ஆனால் பொதுவாக உள்ள காவல் துறையின் மூலமும் ஒவ்வொரு வட்டத்திலும் இதனுடைய அமைப்பு இருக்க வேண்டுமென்று உறுப்பினரவர்கள் விரும்புகிறார்கள். அதை நிதிநிலைமையைப் பொறுத்து பின்னால் அரசாங்கம் கவனிக்கும். ஆறு மாவட்டங்களிலும் ஒவ்வொரு மாவட்டத்திலும் நல்லமுறையில் செயல்பட்டு வருகிறது. இந்தச் செயலில் சாதாரண போலீஸ்காரர்களும் பங்கெடுத்துக் கொண்டு

தான் வருகிறார்கள். இதற்காக அமைக்கப்பட்ட படைகள் மட்டும் வேலை செய்யவில்லை, பொதுவாக உள்ள போலீசும் வேலை செய்து வருகிறது.

திரு. எஸ். வடிவேல்: தீண்டாமை ஒழிப்புச் சட்டம் இருந்தாலும்கூட பல இடங்களில் அரிசனங்களின் உரிமைகள் பறிக்கப்பட்டு கட்டுப்பாடு செய்யக்கூடிய நிலை, பகிஷ்கரிக்கக் கூடிய நிலை இருக்கிறது. ஏதோ எதிர்த்துப் பேசிவிட்டான் என்ற காரணத்தால், அல்லது சுருட்டுப் பிடித்தான் என்ற காரணத்தால், அவனைக் கட்டுப்பாட்டில் வைத்து அவனுக்கு சாமான்கள் கொடுப்பதில்லை, அவன் பொது இடங்களுக்குப் போக முடியாத நிலை, கிணற்றிலே தண்ணீர் எடுக்க முடியாத நிலை, வேலை கொடுக்காத நிலை ஆகியவற்றை உண்டாக்குகிறார்கள். இந்தமாதிரி நிலைமைகளைப் போக்க துரிதமான நடவடிக்கைகளை எடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. என். இராசாங்கம்: தனிப்பட்ட ஒருவர் மீது வைக்கிற கோபத்தால் தனிப்பட்ட ஒருவருக்கு வேலை கொடுக்கமாட்டார்கள். ஊரிலே வேலை செய்கிற இடங்கள் பல இருக்கின்றன. தனிப்பட்ட முறையில் நடைபெறும் இந்தக் காரியங்களுக்கு அரசாங்கம் என்ன செய்ய முடியும்?

திரு. எஸ். வடிவேல்: துணைத் தலைவர் அவர்களே, அவர் சொல்லுவது சரிதானா என்று நீங்களே யோசனை பண்ணுங்கள். .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் கேள்வி கேட்டீர்கள், அமைச்சர் பதில் அளித்துவிட்டார். இப்போது அடுத்த உறுப்பினர். . . .

திரு. கே. டி. கே. தங்கமணி: தீண்டாமை ஒழிப்பு சம்பந்தமாக சட்டம் போட்டிருக்கிறோம். சமீபத்தில் தருமபுரியில், பெண்ணாகரத்தில், அக்கிரகாரம் என்ற கிராமத்தில் கோயில் பிரவேசம் செய்ததற்காக அரிசனங்களை அவர்கள் தாக்கியது மாத்திரமல்லாமல் முன்னணியில் இருந்த ஜாதி இந்து தோழர் ஒருவரை ஜாதிக் கட்டுப்பாடு செய்து அவரை ஊரெல்லாம் பகிஷ்கரித்த காரணத்தால் அவருடைய துணைவியார் தற்கொலை செய்து கொண்டார் என்ற விஷயம் அரசுக்குத் தெரியுமா?

1975 நவம்பர் 11]

மாண்புமிகு திரு. என். இராசாங்கம்: அதைப் பற்றிய தகவல் அரசுக்கு இதுவரை வரவில்லே. எந்த ஊர்?

திரு. கே. டி. கே. தங்கமணி: பெண்ணுகரத்திற்குப் பக்கத்தில் அக்கிரகாரம் என்ற கிராமம். அரிசனங்கள் ஆலயப் பிரவேசம் செய்ததற்காக அரிசனங்கள் ஒதுக்கப்பட்டதோடுகூட ஜாதி இந்து வாலிபர் குடும்பத்தில் இருந்து நீக்கி வைக்கப்பட்டு அதன் காரணமாக அவருடைய துணேவியார் தற்கொலே செய்து கொண்டார் இதுபற்றிப் போலீசார் வழக்கெல்லாம்கூடப் பதிவு செய்திருக்கிருர்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணுநிதி: தீண்டாமை ஒழிக்கப்பட வேண்டுமென்பதற்காக இந்திய நாடு முழுவதும் பரவலாகவும், தீவிரமாகவும் பணிகள் நடைபெற்று வருகின்றன. தமிழக அளவில் நாம் அது முழு அளவில் நடைபெற்றுத் தீரவேண்டுமென்ற வகையில் நீண்ட நெடுங்காலமாக அந்தப் பிரசாரங்கள் நடைபெற்று வந்திருக்கின்றன. அரசு சார்பிலும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

நண்பர் வடிவேல் அவர்களும் திரு. கே. டி. கே. அவர்களும் எடுத்துக் காட்டியது போல் சில சம்பவங்கள் வருமானுல் அதுபற்றி அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டால் உடனடியாக அரசு ஆவன செய்யும். அதன் விவரங்களேத் தருவார்களானுல் உடனடியாக நடவடிக்கை எடுக்க முடியும்.

திருமதி சத்தியவாணிமுத்து: கடந்த வாரம் பட்டுக்கோட்டை பக்கத்தில் அரிசன மக்கள் தாக்கப்பட்டு வீடுகள் தீக்கிரையாக்கப் பட்டது குறித்து நான் ஒரு ரூல் 41 மோஷன் கொடுத்திருந்தேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: சப்ளிமென்டரி கேட்பதற்காக அனுமதி கொடுத்தேன். ரூல் 41 சம்பந்தமாக இப்போது எழுப்பக் கூடாது.

வினக்கள் விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]